1st August 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி சொறி சிரங்கைப் பற்றியது. அதுபற்றிப் பதில் சொல்லும்போது அப்படி ஒன்றும் இல்லை என்று சொன்னேன். மதிய உணவு சுத்தமான முறையில் அளிக்கப்படுவதோடு கூட புஷ்டியானதாகவும் அளிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட்டுதான் வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய சர்க்காரின் சார்பிலேயே ஹெல்த் சர்வே எடுக்கப்பட்டது. அதில் தான் டெபிஷியன்சி, சொறி சிரங்கு, போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் 50 சதவிகிதத்திற்கு மேல் என்று தெரியவந்திருக்கிறது. ஆகவே மதிய உணவினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பது பற்றி கணக்கு எடுக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மதிய உணவினாலே சொறி, சிரங்கு ஏற்பட்டதான தகவல் அரசாங்கத்தினிடம் இல்லை.

Somasundaram Mills, Coimbatore

* 6. *Q.*—SRI M. KALYANASUNDARAM :
SRI A. K. SUBBIAH : } Will the Hon. the Chief Minister be pleased to state the details of steps taken by the Government to lift the lock-out declared by the management of Somasundaram Mills, Coimbatore, from 4th March 1966?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோயம்புத்தூர் தொழிலாளர் துறை துணைக் கமிஷனர், ஆலை நிர்வாகத்தினருடனும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தினார். அதனால் இரு தரப்பினரும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தனர். 16—3—1966 தேதியன்று வேலையைத் தொடங்க இருதரப்பினரும் ஒப்புக் கொண்டனர். அதன்படி, நிர்வாகத்தினர் கதவடைப்பை நிறுத்தி, 15/16—3—1966 தேதி இரவு 1 மணியிலிருந்து ஆலையை மீண்டும் திறந்தனர். 16—3—1966 தேதியன்று மூன்றுவது ஷிப்டிலிருந்து ஆலையில் இயல்பாக வேலை தொடங்கியது.

திரு. ஆ. கு. சுப்பையா : கோவை மாவட்டத்தில் தற்சமயம் எத்தனை ஆலைகளில் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது ? அவைகளைத் திறப்பதற்கு எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலளிக்கும்போது முடிவாகச் சொல்கிறேன் (சிரிப்பு).

அரிசன மாணவ விடுதிகளில் சரும நோய்கள்

* 7. **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டில் எத்தனை ஆதித் திராவிட மாணவர் விடுதிகளில், சொறி, சிரங்கு போன்ற நோய்கள் உண்டாயின ?